அத்தியாயம் 8

# அடைக்கலம் நாடுபவர்களில் 18 வயதுக்குட்பட்டவர்கள்

**நீங்கள் 18 வயதுக்குட்பட்டவர் என்றால், நீங்கள் நார்வேக்குப் பெற்றோர்கள் துணையில்லாமல் வந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் 'துணையின்றி வந்து அடைக்கலம் நாடும் குழந்தைகள்' என்ற சிறப்புக் குழுவின்கீழ் வருகிறீர்கள்.**

நீங்கள் நார்வேக்கு வந்தபோது, நீங்கள் இப்போது அடைக்கலம் நாடுபவர் ஆகியிருப்பதால் உங்களுக்கு என்ன நடக்கும் என்று உங்களிடம் சொன்னார்கள். துணையின்றி வந்த சிறுவர்களின் (குழந்தைகள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்) பாதுகாப்பிற்கான சிறப்புத் தேவை இருக்கிறது. இந்த அத்தியாயத்தில், நார்வேயில் நீங்கள் செலவழிக்கப் போகும் தொடக்கக் காலத்தில் உங்களுக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் உங்களுக்கு எவற்றைப் பெற உரிமைகள் உண்டு என்பதையும் நாங்கள் விளக்குகிறோம்.

## துணையின்றி வந்த குழந்தைகளுக்கான வரவேற்பு மையம்

துணையின்றி வந்து அடைக்கலம் நாடும் குழந்தைகளுக்குச் சிறப்பு உரிமைகள் இருக்கின்றன. அடைக்கல வரவேற்பு மையங்களில் துணையின்றி வந்த குழந்தைகளுக்கும் பதின்பருவத்தினருக்கும் தனிப் பிரிவுகள் இருக்கின்றன. இந்தப் பிரிவுகளில் எந்நேரமும் ஊழியர்கள் இருப்பார்கள். வரவேற்பு மையத்தில் பணிபுரிபவர்களில் ஒருவர் நீங்கள் தொடர்பு கொள்வதற்கான நபராக இருப்பார். வரவேற்பு மைய ஊழியர்கள் உங்களுக்குப் பொறுப்பாளிகள். அவர்கள் உங்களுடைய அன்றாடத் தேவைகள் தொடர்பான உதவிகளைச் செய்வார்கள்.

## காப்பாளர்

நீங்கள் நார்வேக்கு வரும்போது உங்களுக்காக ஒரு காப்பாளர் நியமிக்கப்படுவார். உங்கள் காப்பாளர் உங்களுக்குச் சேர வேண்டிய எல்லா நன்மைகளும் உங்களுக்குக் கிடைக்க வழி செய்வார். அவர் உங்கள் சட்ட மற்றும் நிதி விஷயங்களையும் கவனித்துக்கொள்வார். நீங்கள் உங்கள் காப்பாளரிடம் என்ன உதவிகளை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி உங்கள் வரவேற்பு மைய ஊழியர்களிடம் கேளுங்கள்.

## வழக்கறிஞர்

உங்களுக்கு ஒரு வழக்கறிஞரின் உதவியும் அளிக்கப்படும். உங்கள் வழக்கறிஞர் நீங்கள் நார்வேயில் அடைக்கலத்திற்கு விண்ணப்பிக்க உதவுவார். நீங்கள் பொதுவாக UDI-உடனான உங்கள் நேர்காணலுக்கு முன் உங்கள் வழக்கறிஞரைச் சந்திக்க வேண்டும். அவர் நீங்கள் அந்த நேர்காணலுக்குத் தயார்படுத்திக்கொள்ள உதவுவார். அதற்குப் பின் நீங்களும் உங்கள் வழக்கறிஞரும் நேர்காணலை கவனித்து, உங்கள் வாக்குமூலத்தில் உள்ள எல்லாமே சரிதானா என்று சரிபார்ப்பீர்கள். உங்கள் அடைக்கல விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் நீங்கள் அதை எதிர்த்து முறையீடு செய்ய உங்கள் வழக்கறிஞர் உதவுவார். இந்த நடைமுறை குறித்து மேலும் அறிய அத்தியாயம் 1-ஐப் படியுங்கள்.

## கல்வி

நார்வேயில் ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்குச் செல்ல வேண்டும். உங்களுக்கு 6 வயதிலிருந்து 16 வயது ஆகிறது என்றால் நீங்கள் ஒரு துவக்கப் பள்ளியிலோ நடுநிலைப் பள்ளியிலோ படிக்க வேண்டும். உங்கள் அடைக்கல வரவேற்பு மையம் உங்களைச் சரியான பள்ளியில் சேர்க்கும். உங்களுக்கு 16லிருந்து 18 வயது ஆகிறது என்றால் உங்களுக்கு நார்வீஜிய மொழிப் பயிற்சி ஒன்றிற்குச் செல்ல உரிமை உண்டு. நடுநிலைப் பள்ளி அளவில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களில் பயிற்சி பெறவும்

வரவேற்பு மையத்தில் பணிபுரிபவர்களில் ஒருவர் நீங்கள் தொடர்பு கொள்வதற்கான நபராக இருப்பார். வரவேற்பு மைய ஊழியர்கள் உங்களுக்குப் பொறுப்பாளிகள். அவர்கள் உங்களுடைய அன்றாடத் தேவைகள் தொடர்பான உதவிகளைச் செய்வார்கள்.







உரிமை இருக்கக் கூடும். அப்படி இருக்கும் பட்சத்தில் நடுநிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுதுவதே உங்கள் இலக்கு. உங்கள் வரவேற்பு மைய ஊழியர்கள் உங்கள் பள்ளியைத் தொடர்பு கொண்டு உங்கள் வீட்டுப் பாடத்திற்கு உதவி கிடைக்க வழி செய்வார்கள்.

### தகவல் திட்டம்

பள்ளியில் நீங்கள் படிப்பதற்கு நிறைய பாடங்கள் இருக்கும். ஆனால் பள்ளியில் கற்றுத் தரப்படாத சில விஷயங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அடைக்கலம் நாடுபவர் என்ற முறையில் உங்களுக்குச் சேர வேண்டியவை என்ன என்றும் உங்களுக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வெவ்வேறு சூழ்நிலைகளில் நீங்களாக என்ன செய்ய வேண்டும் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உங்கள் வரவேற்பு மைய ஊழியர்கள் தகவல் திட்டத்தின்படி உங்களுக்கு இவற்றைப் பற்றியும் இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் சொல்வார்கள்.

### உங்கள் வயதை நிரூபித்தல்

பெரியவர்கள் சிலர் தாங்கள் 18 வயதுக்குட்பட்டவர் என்று சொல்லிக்கொண்டால் அடைக்கலம் கிடைக்க அதிக வாய்ப்பு இருப்பதாக நினைத்து அப்படிக் காட்டிக்கொள்கிறார்கள். அதனால்தான் UDI வழக்கமாக அடைக்கலம் நாடுபவரின் வயதை நிர்ணயிக்க ஒரு மருத்துவப் பரிசோதனை செய்கிறது. நீங்கள் இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்ள நீங்கள் சம்மதிக்கலாம் அல்லது மறுக்கலாம்; ஆனால் நீங்கள் இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்ளவில்லை என்றால் அது அடைக்கலத்திற்கான உங்கள் கோரிக்கையை பலவீனப்படுத்தக் கூடும்.

மேலும் தகவலுக்கு:

**www.noas.org**

**www.bip.no**

**www.udi.no**

### பெற்றோர்கள் அல்லது உறவினர்களைத் தேடுதல்

நீங்கள் நார்வேக்கு வரும்போது, உங்கள் பெற்றோர் உயிருடன் இருக்கும் பட்சத்தில் அவர்களைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவி வழங்கப்படலாம். நீங்கள் பிற உறவினர்களைக் கண்டுபிடிக்கவும் உங்களுக்கு உதவி அளிக்கப்படலாம். உங்கள் குடும்பத்தைத் தேடுவதற்கு உதவத் தகவல் கொடுத்தால் அவர்களைத் தொடர்பு கொள்வது இன்னும் சுலபமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் குடும்பத்தினரைத் தேடித் தொடர்பு கொள்வது எப்படி என்று உங்கள் வரவேற்பு மைய ஊழியர்களுடன் பேசித் தெரிந்துகொள்ளலாம்.

### இடமாற்றம்

UDI அடைக்கலம் நாடும் குழந்தைகளின் விண்ணப்பங்களைப் பிற விண்ணப்பங்களை விடத் துரிதமாகப் பரிசீலிக்கிறார்கள். வரவேற்பு மையத்தில் உங்களை முடிந்த வரை குறைந்த காலத்திற்குத் தங்க வைக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது.

உங்களுக்கு நார்வேயில் வசிக்க அனுமதி வழங்கப்பட்டால், UDI உங்களுக்கு இங்கே இருக்க அனுமதி அளித்து மூன்று மாதங்களுக்குள் உங்களுக்கு ஊராட்சி அமைப்பு ஒன்றிலிருந்து இடமாற்றம் செய்ய வாய்ப்பு தரப்படும்.

உங்கள் சூழ்நிலை பற்றி மேலும் தகவல் பெற உங்கள் வரவேற்பு மைய ஊழியர்களிடம் பேசுங்கள்.

### தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்லுதல்

நீங்கள் உங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பினால், உங்களுக்குப் பயண ஏற்பாடுகள் செய்ய எப்படி உதவி பெறுவது என்று உங்கள் வரவேற்பு மைய ஊழியர்களிடம் கேட்கலாம். இதைப் பற்றி மேலும் அறிய அத்தியாயம் 6-ஐப் படியுங்கள்.

### பணம்

நீங்கள் அடைக்கல வரவேற்பு மையத்தில் தங்கியிருக்கும்போது உங்களுக்குக் கைச்செலவிற்குப் பணம் பெற உரிமை உண்டு. உங்கள் உணவையும் சமையல் பண்டங்களையும் நீங்களே வாங்குகிறீர்கள் என்றால் நீங்கள் பெறும் கைச்செலவுத் தொகை அதிகமாக இருக்கும். இந்தப் பணம் ஆடைகள் வாங்குதல், மருத்துவ சிகிச்சை, மருந்துகள் போன்றவற்றுக்கு செலவு செய்வதற்காகத் தரப்படுகிறது. நீங்கள் துணையின்றி வந்து அடைக்கலம் நாடும் குழந்தை என்றால் உங்கள் வரவேற்பு மையத்தின் நிர்வாகி உங்கள் பணத்தை கவனித்துக்கொள்வார். இந்தப் பணத்தை எப்படி செலவு செய்வது என்று நீங்கள் இருவரும் இணைந்து முடிவு செய்ய வேண்டும். உங்களுக்குத் தரப்பட வேண்டிய பணம் எவ்வளவு என்று உங்கள் வரவேற்பு மைய ஊழியர்களைக் கேளுங்கள்.

